விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 035 வள்ளுவர் ஆண்டு 2056 தை 10 வியாழக்கிழமை (23.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# பயங்கரவாதச் சட்டம் விரைவில் நீக்கப்படும்

## பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும் எனப் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதி

### ஆராய குழு

(கொழும்பு)

இலங்கைக்குள் வெளிநாட்டு ஆய்வுக் கப்பலை அனுமதிப்பது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

15

### வவுனியா பெண்

## கொழும்பில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் கொழும்பு மருதானைப் பொலிஸ் நிலையத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

## அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜேபால



(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

15

### ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்

## ஒரு வாரத்துக்குள் முக்கிய தகவல்கள் வெளியிடப்படும்

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஒரு வாரத்துக்குள் முக்கிய தகவல்கள் வெளியிடப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணலொன்றில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் பல்வேறு கோணங்

15

## இளைஞனை நிர்வாணமாக்கி கட்டிவைத்துத் தாக்குதல்

### 20 பேர் கொண்ட குழுவை தேடும் கோப்பாய் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழில் இளைஞன் ஒருவரை நிர்வாணமாக்கிக் கட்டி வைத்துத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 20 பேர் கொண்ட கும்பலை கோப்பாய் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இருகுடும்பங்களுக்கு இடையில் முரண்பாட்டையடுத்து அண்மையில் இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞனை அவரது

15

## உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து அரசியலமைப்பில் திருத்தம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து அரசியலமைப்புக்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நேர்காணலில் கலந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் புதிய அரசிய

15

## ஆவரங்கால் பகுதியில் மோ.சைக்கிள் விபத்து

### இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் விதுஷன் (வயது-32), கரவெட்டியைச் சேர்ந்த தேவ

16

### அமைச்சர்களுக்கு

## சொகுசு இல்லங்கள் நிறுத்தம்

(கொழும்பு)

அமைச்சர்களுக்கு அதி சொகுசு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்படுவதை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்

15

## அர்ச்சுனாவைச் சந்தேகநபராக ஏற்றுக்கொள்ள முடியாது

### அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் தெரிவிப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போக்குவரத்துப் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவைச் சந்தேகநபராக நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதை அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்ஜீவ ஜயசூரிய நிராகரித்துள்ளார்.

சந்தேகநபரின் பெயரை அர்ச்சுனா லோச்சன என பி அறிக்கையில்

02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனாவை...

பொலிஸார் குறிப்பிட்டுள்ளதாக நீதவான் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நேற்றைய தினம் தேசிய அடையாள அட்டையுடன் நீதிமன்றில் முன்னிலையான சந்தேகநபரின் பெயர் இராமநாதன் அர்ச்சுனா என குறிப்பிடப்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்துள்ளார்.

இரண்டு பெயரிலும் வித்தியாசம் காணப்படுவதாகவும் இராமநாதன் அர்ச்சுனாவை சந்தேகநபராக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் நீதவான் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கின் சந்தேகநபர் தாம் எனக் கூறி பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றில் முன்னிலையாகிருந்தார். (ம-7)

## பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேருரை இன்று



(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேருரை இன்று(23) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் இடம் பெற உள்ளது.


தூரதரிசனத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூலவராக, யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைவராக விளங்கியவர் பேராசிரியர் கைலாசபதி அவர்கள்.

ஈழத்திலும் தமிழகத்திலும் உலக கல்விப்புலத்திலும் ஆய்வாளராகவும் திறனாய்வாளராகவும் தடம்பதித்தவர். அவரின் மேலான நினைவுகளைக் கொண்டாடும் முகமாக பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்நினைவுப் பேருரையினை 'இன மரபு இசையியலாக தமிழிசை: சங்ககாலம் முதல் எங்கள் காலம் வரை' என்ற பொருண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்த்தவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா தலைமையில் இப்பேருரை இடம் பெறவுள்ளது. (ம-7)


## மனமார்ந்த நன்றி

போக்குவரத்து வசதியின்றி தவித்த எம் கோரிக்கைக்கு அமைவாக முக்கொம்பனுக்கான இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீண்டும் உரிய வழித்தடத்தினூடு (மருதனார்மடம் – உரும்பிராய் – கோப்பாய் – கைதடி – சாவகச்சேரி – தனங்கிழப்பு – பூநகரி – கறுக்காய்த்தீவு – முக்கொம்பன்) பயணிப்பதற்காக வழி சமைத்துத் தந்த



கௌரவ.இராமலிங்கம் சந்திரசேகர்
கௌரவ அமைச்சர்
கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்
அவர்களுக்கும்

கௌரவ. பாராளுமன்ற உறுப்பினர்
கருணைநாதன் இளங்குமரன்
அவர்களுக்கும்

திரு.தாராளசிங்கம் பிரகாஷ்
உப செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட செயலாளர்
இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம்.

ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– ஆசிரியர்கள், பூநகரிப் பிரதேசம்.

(691)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் மேனாள் தலைவரும் இந்துக் கற்கைகள் பீடத்தின் மேனாள் பீடாதிபதியுமான
கலாநிதி. திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம்
[ஓய்வு நிலை ஆசிரியர்]

22.01.2025 அன்று சிவப்பேறு பெற்றார். அவரது ஆத்மா இறைநிழலில் ஒன்றிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து நாகரிகத் துறையினர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(771)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திருமதி சாந்தினி வாகீசன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம்
[ஓய்வு நிலை ஆசிரியர்]

22.01.2025 அன்று இறைபதம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

(772)



## மரண அறிவித்தல்

தோற்றம் 1930 - 05 - 13



மறைவு 2025 - 01 - 22

### திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் – யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆச்சிமுத்து பொன்னம்பலம் நேற்று (22.01.2025) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சினித்தம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்புத்துரை பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகம், இரத்தினம், சின்னம்மா, தருமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தினி (அதிபர் - யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), சுகந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாகீசன் (ஓய்வுநிலை அதிபர்), ஸ்ரீமுரளிதரன் (உள்ளூராட்சி உதவியாளர் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டிவாகர் (Pursuing a PhD in computer Engineering at the University of Manitoba), டிலக்ஷன் (MSc in Data science and artificial Inteligence, University of Moratuwa), மலரவன் (Animal science and Food Technology - 3rd year, ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), எழிலவன் (Agriculture Resource Management and Food Technology - 2nd year, றுகுணு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியும் திருமதி டர்சனா டிவாகர் (Studied MSc in Biosystems Engineering at the University of Manitoba) அவர்களின் பேர்த்தியும் ஹரின், ரேவன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளுவானை வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

திரு.வாகீசன் : 077 654 4666
திரு.த.சிறீமுரளிதரன் : 077 200 7580

தகவல்:
குடும்பத்தினர்

(770)



## மரண அறிவித்தல்

### அன்னை கந்தசாமி பராசக்தி



தோற்றம் 09.07.1931 மறைவு 22.01.2025

மலேசியாவை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு கற்பக பிள்ளையார் வீதி மற்றும் கோவில் வாசல் மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி கனகபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மீசாலையை வசிப்பிடமாகக் கொண்ட அன்னை கந்தசாமி பராசக்தி அவர்கள் நேற்று 22.01.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மலாயன் பென்சனியர் நல்லையா மனோன்மணி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதி கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவஞானம் மங்கையற்கரசி (உரும்பிராய் வடக்கு - கனடா) காலஞ்சென்ற நல்லையா ஆறுமுகதாஸ் (உரும்பிராய் வடக்கு) மற்றும் நல்லையா கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கந்தசாமி சபாறஞ்சன் (சுவிஸ்), கந்தசாமி சக்திதரன் (முன்னாள்உதவிக் கல்விப் பணிப்பாளர-துணுக்காய்), குகதாஸன் சக்திகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சபாரஞ்சன் எழிலோன் (சுவிஸ்), சக்திதரன் கபிஷாலினி (யாழ் இந்து மகளீர் கல்லூரி) சக்திதரன் சபர்ணா (யாழ்.இந்து மகளீர் ஆரம்பப் பாடசாலை) கரிஸ்சாந் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), குகதாசன் சிவானி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சறோஜாதேவி (சுவிஸ்) கவிதா (மீசாலை) குகதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 070 3360
076 090 3854

(C-2114)

தகவல்: கந்தசாமி சக்கிதரன்
(பொதுச் செயலாளர் கல்வி அபிவிருத்தி, [illegible])
மீசாலை மேற்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் எமக்கு ஆட்சேபனை எதுவுமில்லை

## பகிரங்கமாக தெரிவித்த ஐ.ம.ச



(கொழும்பு)

**அரசியல் கைதிகளை தேசிய மக்கள் சக்தி அரசு விடுதலை செய்வதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் கூறியதாவது,

"சிறைச்சாலைகளில் தற்போது குறைந்தளவு அரசியல் கைதிகளே உள்ளனர் என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளார்கள். எனவே அவர்களை இந்த அரசு விடுதலை செய்வதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு எமது கட்சியின் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசியல் கைதிகளை மிக விரைவில் விடுதலை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-8)

---

### மதுபானசாலைக்கான அனுமதி

# புதிதாக எதனையும் வழங்க முடியாது பழையதை ரத்து செய்யவும் முடியாது

## அமைச்சர் பிமல்



(கொழும்பு)

அரசாங்கம் புதிதாக மதுபான சாலைக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கவில்லை, வழங்க போவதுமில்லை. சட்ட ரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். அனுமதிப்பத்திரம் சட்டரீதியில் வழங்கப்பட்டிருப்பதால் அது சட்டரீதியான ஆவணமாகும். பலவந்தமான முறையில் செயற்பட முடியாது என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவிக்கையில், கல்முனை - நீலாவணை பகுதியில் புதிதாக மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

கடந்த அரசாங்கம் வழங்கிய மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை" என்று குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளிக்கையில் சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான எமது அரசாங்கம் புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் ஏதும் விநியோகிக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பெரும்பாலான மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மதுபானசாலை பத்திரங்கள் குறித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஹன்சாட்டில் பதியப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் சட்ட ரீதியில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அது சட்டரீதியான ஆவணமாகக் கருதப்படும். அரசியல் ரீதியில் விருப்பம் இல்லாவிடினும் அதனை இரத்து செய்வது சட்ட செயற்பாடாகும். அரசாங்கம் பலவந்தமான முறையில் இரத்துச் செய்ய முடியாது.

இருப்பினும் நிர்வாக கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறான பழைய குப்பை மேடுகளை கிளீன் செய்யவே முயற்சிக்கிறோம். அரசாங்கம் புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கப் போவதில்லை.

சட்டரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும். இருப்பினும் நிர்வாகம் மற்றும் சமூக கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-8)

---

# தேங்காய் இறக்குமதிக்கு அனுமதிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

அடுத்த சில மாதங்களுக்குள் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு இலங்கை தென்னை கைத்தொழில் சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய தேங்காய் தட்டுப்பாட்டிற்கு உரங்களின் விலையேற்றமே பிரதான காரணம் என்று அதன் தலைவர் ஜெயந்த சமரகோன் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு தென்னை முக்கோணத்தில் தென்னைச் செய்கைக்காக அரசாங்கம் 1,437 மில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளதாகப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் 40,000 ஹெக்டேயர் தென்னை மரங்களை நடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1,437 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றும் போது கூறினார்.

நாட்டிலுள்ள 5 ஹெக்டேயருக்கும் குறைவான தென்னந் தோப்புகளுக்கு இலவச உரம் வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வாய்மொழி மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இருந்து பெறப்பட்ட 55,000 மெற்றிக் தொன் உரத்தில் 27,500 மெற்றிக்தொன் தென்னைச் செய்கைக்காக ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடரும் தேங்காய் பிரச்சினையால் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 250 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (நி-8)

---

# அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைத்தது 'சதொச'

(கொழும்பு)

சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, பின்வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதுடன், நுகர்வோர் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் பின்வரும் இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது

அந்த வகையில் ரூ.1095 ஆக இருந்த நிலக்கடலை ரூ.995 ஆகவும் 340 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பிறவுன் சீனி 300 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 210 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 180 ரூபாவாக குறைக்கப் பட்டுள்ளதுடன் 795 ரூபாவாக இருந்த சிவப்பு கௌப்பி கிலோ ஒன்று 765 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உலர் நெத்தலி 940 ரூபாவாக குறைக்கப் பட்டுள்ளதுடன் ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 830 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாஸ்மதி அரிசி (பிரீமியர்) கிலோ முன்னைய விலை ரூ.655 ஆகவும், புதிய விலை ரூ.645 ஆகவும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் முன்னைய விலை 240 ரூபாவாகவும் புதிய விலை 230 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு கிலோ துவரம் பருப்பின் முந்தைய விலை 290 ரூபாவாகவும் புதிய விலை 288 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ வெள்ளை சீனியின் முந்தைய விலை 242 ரூபாவாகவும் புதிய விலை 240 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்திரேலிய ஓபன்
# ஸ்வியாடெக், மேடிசன் அரையிறுதிக்கு முன்னேற்றம்

அவுஸ்திரேலிய ஓபனில் எட்டாம் நிலை வீராங்கனையான எம்மா நவ ரோவுக்கு எதிராக நேற்று இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் இகா ஸ்வியாடெக் 6-1, 6-2 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

2 ஆம் நிலை வீராங்கனையான பொலிஸ் ஸ்விடெக் போட்டியில் ஒரு செட்டையும் கைவிடவில்லை.

இதேவேளை, பெண்களுக்கான மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் மேடி சன் கீஸ், எலினா ஸ்விடோலி னாவை தோற்கடித்து அவுஸ்திரேலிய ஓபன் அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த ஆட்டத்தில் 29 வயதான அமெரிக்க வீராங்கனை உக்ரைனைச் சேர்ந்த எலினா ஸ்விடோலினாவை 3-6, 6-3, 6-4 என்ற கணக்கில் தோற்கடித்தார். அவர் ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் வென் றவரும், 2024 ஒலிம்பிக் வெண் கலப் பதக்கம் வென்றவருமான இகா ஸ்வியாடெக்கை அரையிறுதி யில் மெல்போர்னில் நடக்கும் இறுதிப் போட்டிக்கு முன்னதாக எதிர்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## பயங்கரவாத...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற் றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பய ங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண் டும் என்று வலியுறுத்தினார் மேலும்,

இனப்பிரச்சினை தொடர்பான தெளி வான நிலைப்பாட்டைத் தேசிய மக்கள் சக்தி இதுவரையில் முன்வைக்கவி ல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


75 ஆண்டு காலமாக நிலவிய பிரச் சினைகளைத் தீர்ப்பதற்காகவே மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தமிழ் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட் டுள்ளதுடன் ஜே.வி.பியினருக்கும் இந்த சட்டத்தின் பாதிப்பு நன்றாகவே தெரியும்.

இந்த சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் கொண்டுவரப்படும் என தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னதாக குறிப்பிட்டு வந்தது. தேர்தலுக்குப் பின்னர்,அரசாங்கம் தமது நிலைப்பாட்டிலிருந்து விலகியுள் ளது என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் குறித்த சட்டத்தை நீக்கி, அதற்குப்பதிலாக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும். அதற்குரிய அமைச்சரவை பத்திரத்தைத் தயாரிக்கும் பணிகள் தற்போது முன்னெடுக் கப்பட்டு வருகின்றது என்றார். (ம)

# பாகிஸ்தான் பெயரிட்ட ஜெர்சியை அணிய மறுத்த இந்திய வீரர்கள்




ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் "பாகிஸ்தான்"பெயர் அச்சிடப்பட்ட ஜெர்சியை அணிவதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தானுக்கு செல்வதற்கு இந்தியா அணி மறுத்துள்ள நிலையில், இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளை டுபாயில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் போட்டி நடத்துநரான பாகிஸ்தான் மற்றும் சர்வதேச கிரிக்கெட் பேரவை ஆகியவற்றின் பெயர்கள், தொடரில் பங்கேற்கும் வீரர்களின் ஜெர்ஷியில் அச்சிடப்படும்.

இருப்பினும் தற்போது இந்தியா அதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, விளையாட்டில் அரசியலை புகுத்து வதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆரம்ப அங்கமான அணித் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோஹித் சர்மாவை பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3289

மீரா




வினுசிகா




தாட்ஷா




ராஜ்




விபுல்




கம்சியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசின் திட்டத்திற்கு ஏற்ப செயற்படாவிட்டால் அரிசி ஆலைகள் கையகப்படுத்தப்படும்!

## ஆலை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்த ஜனாதிபதி

(கொழும்பு)

**அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய செயற்படாத அரிசி ஆலைகளுக்கு இராணுவம் அனுப்பப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய நெல் ஆலைகளின் உரிமையாளர்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படாவிட்டால், நெல் ஆலையில் இருந்து கடைக்கு அரிசி கொண்டு செல்லும் வரை இராணுவ கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

அரிசி தேசிய சொத்து. அரசாங்கம் இதுவரை எந்த விதமான நியாயமற்ற விதி முறைகளையும் ஏற்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஆலை உரிமையாளர் எவரேனும் இணங்காவிட்டால், ஆலையை இராணுவத்தினரால் கையகப்படுத்தி அரிசி உற்பத்தி செய்து சந்தைக்கு



விடப்படும் என்றும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

தற்போதைய கட்டுப்பாட்டு விலையை விட ஒரு சதம் அதிகமாக அரிசி விற்பனை செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-8)



அரச உத்தியோகத்தர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.வலைப்பந்தாட்ட பயிற்றுநர் செல்வி மனோன்மணி சின்னத்தம்பி தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணுமாறு வலியுறுத்து



(கொழும்பு)

வடக்கு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணுமாறு வலியுறுத்தி கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

நேற்று முன்தினம் அமைச்சர் சந்திரசேகரனுக்கும் ரவிகரன் எம்.பிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் கடல் வளங்கள் அழிக்கப்படுதல், மீன்பிடி உபகரணங்கள்- சேதமாக்கப்படுதல் போன்ற மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (நி-8-299)



வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையால் அண்மையில் "மாருதப் புரவீகம்" எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நூலின் பிரதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபனிடமிருந்து ஜே/72 மயிலிட்டி வடக்கின் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வை.தில்லை நடராஜா பெற்றுக்கொள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பலாலியில் அமைந்துள்ள யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கும்,விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமையும் என ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

காணிகளை சுவீகரிப்பதற்கு முன்னதாக 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும்தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப அவர்களுக்கு இழப்பீடு முதல்கட்டமாக வழங்கிய பின்னரே தற்போது தேவைப்படும் மேலதிக காணிகளுக்காக சுவீகரிப்பை ஆரம்பிக்கலாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்.விமான நிலையத்தின் விரிவாக்கத்தின்போது இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகளுக்கான நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

உள்ளூர் விமான சேவைகள் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. கொழும்பு - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் சேவைகளை முன்னெடுப்பதற்கு, பயணிகளின் தேவைப்பாடு தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்குமாறு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்தனர்.



தற்போது சேவையை முன்னெடுக்கும் இண்டிகோ விமான சேவை நிறுவனம் சென்னை-யாழ்ப்பாணம் சேவைக்கு மேலதிகமாக பெங்களூர் - யாழ்ப்பாணம் சேவையை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா இந்த மாத இறுதியில் யாழிற்கு வரவுள்ளதாகவும் இதன்போது அபிவிருத்திக்கான நிதி மூலம் தொடர்பில் உறுதி செய்யலாம் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பழை பிரதேச செயலர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (6-8)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க வடமாகாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக மேல் மாடி DPUK குணத்திலக்க அரங்கில் ஓய்வுநிலை மின் பொறியியலாளர் ச.ஞானகணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.பிரபாகரன் கலந்து கொள்ளவுள்ளார். குறித்த கூட்டத்தில் நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளமையால் இலங்கை மின்சார சபையில் ஓய்வு பெற்றவர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (6-8)

## வலைப்பந்தாட்ட பெண்கள் அணித்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் நடத்தப்படும் சிரேஷ்ட வலைப்பந்தாட்ட பெண்கள் அணித் தெரிவு எதிர் வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டத்தில் உள்ள வலைப்பந்தாட்ட வீராங்கனைகளை பங்குபற்றுமாறு யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க செயலாளர் திருமதி ச.சியாமா அறிவித்துள்ளார். (6-8-90)

# நாவற்குழி உணவுக்களஞ்சியத்தில் நெல்லினை உலரவிட அனுமதியுங்கள்

(சாவகச்சேரி)

நாவற்குழி உணவுக் களஞ்சிய வளாகத்தில் விவசாயிகளை நெல் உலரவைக்க அனுமதிக்க வேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக இயற்கையின் நண்பர்கள் அமைப்பினர் கருத்துத் தெரிவிக்கையில், நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

குறிப்பாக நெல் கிலோ ஒன்றின் உறுதியான விலையையும், அரிசி கிலோ ஒன்றின் உறுதியான விலையையும் உடனடியாக அறிவித்து அதனை வர்த்தமானியில் வெளியிட வேண்டும்.

தென்மராட்சியில் நெல் அறுவடைசெய்த விவசாயிகள் அண்மைய நாட்களாக நாவற்குழி மற்றும் கைதடி பாலங்களில் நெல்லினை உலரவைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். அது பாதுகாப்பற்ற ஒரு முறையாக உள்ளதால் நீண்டகாலமாக மூடப்பட்டு இருக்கும் நாவற்குழி உணவுக்களஞ்சிய வெளி வளாகத்தில் குறித்த விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லினை உலரவைக்க வடக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் நீண்ட காலமாக இயங்காமல் இருக்கும் ஏனைய உணவுக் களஞ்சியங்களுடன் நாவற்குழி உணவுக் களஞ்சியமும் மீளவும் புனரமைக்கப்பட்டு நெல் உள்ளிட்ட உணவுப்பொருட்களை சேமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் வயலில் அறுவடை செய்யும்போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கும் கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-8-30)

## ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் தேசிய மாநாடு

(வவுனியா)

நித்திலம் கலையகத்தின் ஏற்பாட்டில் ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் முதலாவது தேசிய மாநாடு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வவுனியா, சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது. (நி-8)

# இராசிபலன்

23.01.2025
தை 10, வியாழக்கிழமை
நவமி பிற்பகல் 4.40 மணிவரை

விசாகம் பின்னிரவு 4.20 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36மணிவரை

சந்திராஷ்டமம் - அச்சுவினி

வளவன்

**மேஷம்**: விருப்பங்கள் நிறைவேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் புகழ் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்**: கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நினைத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்**: காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணத்தால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்**: மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறர் உதவியுண்டு.

**இடபம்**: உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**: அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**: வீட்டுப் பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சயனசுகக் குறைவான நாள்.

**கும்பம்**: வீண்பழிகள் அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் சுணக்கம் ஏற்படலாம், பக்கபலமான நண்பர்களின் கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்**: மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**: திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் சந்தோசம் காண வேண்டிய நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**தனுசு**: குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**: அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பொறுப்புக்கள் அதிகரிக்கும், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தைரியம், புத்தி, நுண்ணறிவு இவை மூன்றும் ஒருவருக்கு நல்ல நண்பர்கள்.

# அனர்த்த உயிரிழப்புக்களுக்கான இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

அனர்த்தங்களினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகையை 250,000 ரூபாயிலிருந்து ஒரு மில்லியன் ரூபாயாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.


பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் வானிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளன.

அத்துடன் மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், முப்படையினர், பொலிஸ், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிற நிவாரண அமைப்புகள் அனைத்தும் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அனர்த்த நிவாரண சேவைகளுக்காக 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்குத் தினசரி உணவுப் பங்கீட்டுக் கொடுப்பனவுக்காக ஒருவருக்கு 1,800 ரூபாய் தொடக்கம் குடும்ப அளவைப் பொறுத்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



இலங்கைகடற்படையின் சேவா வனிதா பிரிவு மற்றும் கடற்படை பல் சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடனும், 'குட் நெய்பர்ஸ் பவுண்டேசனின்' ஒத்துழைப்புடன் இலவச பற்சிகிச்சை முகாம் நேற்று காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு BMICH இல் 08.01.2025 மற்றும் 09.01.2025 இல் நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர்களான



திருமதி. இவோன் சுகாசினி ஹரிகரன் (முதுகல்வியல்மாணி)




திருமதி. காயத்ரி காந்தன் (பட்டமேற்கல்வி டிப்ளோமா)

ஆகியோரை வாழ்த்தி மகிழ்வதோடு மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்



# கிளை கட்டிடம் 102 வேலைக்கான கேள்வி அறிவித்தல் விலை கோரல்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்(வ-து)
பதிவு.இல:- ஜே/1596 பதிவுத் திகதி: 11.03.1972
T.P. 021 221 1677 Email: kaytspalm72@gmail.com

அம்பலவாணர் வீதி ஊர்காவற்றுறையில் அமைக்கவுள்ள கிளைக் கட்டிடம் 102 வேலைக்கான கேள்வி விலை கோரல் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

❖ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தினையும் தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு கடமை நாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 இற்கிடையில் நேரடியாக வருகை தந்து இடத்தினைப் பார்வையிட்டு பூரணப்படுத்திய விண்ணப்பங்களைத் தலைவர், ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு 31.01.2025ஆம் திகதி நண்பகல் 12.00pm மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது சங்கத்தின் இயக்குநர் சபையில் திறக்கப்படும்.

❖கேள்விக் கூறுவிலையானது மொத்தப் பெறுமதி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

**கட்டிட விபரம்**

கிளைக்கட்டிடம் - 11" * 17"
பாவனையாளர் கொட்டகை - 25" * 10"
மலசலகூடம் - 5" * 3" (குழி - 10.6" * 3.6")

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | வேண்டப்படும் கேள்வி வைப்பு |
|---|---|---|
| | | மீளளிக்க முடியாத தொகை |
| NP/J/1596 KPDCS/ 2025/08/26 | கிளைக்கட்டிடம் + மலசலகூடம் | 1000 |

❖சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ பகுதியாகவோ நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ இயக்குநர் சபைக்கு அதிகாரமுண்டு.

**தலைவர்,**
**ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: TO
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்
தொ.இ: B/15089

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 56
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L, இரும்புகடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15090

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: புரட்டாதி
கி.பா: 52
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L, Hardware Shop
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15091

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
8 இல் செவ்
கி.பா: 46
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc, ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: BSc, அரச உத்தியோகம்
தொ.இ: G/15001

பிறப்பு : 1995 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Political Science, Senior Officer. (Australia).
எதிர்பார்ப்பு : Degree and Employee.
தொ.இ: G/15002

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher, (Australia)
எதிர்பார்ப்பு: Degree and Employee
தொ.இ: G/15003

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# மரக்கறிகளுடன் சென்ற லொறி விபத்துக்குள்ளானதில்

- 11 பேர் உயிரிழப்பு
- 15 பேர் படுகாயம்
- கர்நாடகாவில் துயரம்




(டில்லி)

கர்நாடகாவின் உத்தர கன்னடா மாவட்டத்தில் 50 மீற்றர் ஆழமான பள்ளத்தில் லொறி ஒன்று கவிழ்ந்த விபத்தில் லொறியில் பயணித்த 11 பேர் உயிரிழந்துள்ளனர். 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலை குல்லாபூர் கிராமத்திற்கு அருகில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள், ஹாவேரி மாவட்டத்தின் சவனூர் என்ற பகுதியில் இருந்து கும்தா சந்தைக்கு மரக்கறிகளை விற்கச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

லொறியில் 30 இற்கும் மேற்பட்டோர் இருந்ததாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். "பள்ளம் காரணமாகவோ அல்லது ஓட்டுநர் சமநிலையை இழந்ததன் காரணமாகவோ லொறி கவிழ்ந்திருக்கலாம். விபத்துக்கான காரணத்தை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்." என பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

## சுயநினைவை இழந்த குட்டியுடன் மருத்துவரிடம் வந்த நாய்

### வியப்பில் ஆழ்த்தும் காணொளி




(அங்காரா)

சுயநினைவை இழந்த குட்டியுடன் செல்லப் பிராணிகளுக்கான கிளினிக்கிற்கு வந்த நாயின் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

பொதுவாக சமூக வலைத்தளங்களில் விலங்குகள் செய்யும் குறும்புகளைக் காணொளியாகப் பகிர்வது வழக்கம். இதனை சில பயனர்கள் வேலையாகவே செய்து வருகிறார்கள்.

அவர்களுக்கு ஏற்றால் போல் விலங்குகளும் தற்போது சமூக வலைத்தளங்களில் ஆக்டிவாக இருந்து வருகின்றன.

அந்த வகையில், துருக்கியில் மழையில் நனைந்து சுயநினைவை இழந்த தனது குட்டியைக் காப்பாற்ற நினைத்த தாய் நாய் ஒன்று அதனை வாயால் கௌவியபடி குறித்த கிளினிக் நடைபெறும் இடத்திற்கு வந்துள்ளது.

குட்டி நாயின் நிலையை பார்த்த மருத்துவர்கள் உடனே அதனை சிகிச்சையளிக்கும் இடத்திற்கு அழைத்து சிகிச்சை கொடுத்துள்ளனர்.

நாயின் இந்தச் செயல் இணையவாசிகள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அத்துடன் "நாயாக இருந்தாலும் குழந்தை என வரும் பொழுது இப்படி தான் யோசிக்கும்" என்று கருத்துக்களையும் பதிவு செய்து வருகிறார்கள். (நி-8)

## அத்தியாவசியப் பொருட்களுடன் காசாவிற்குள் நுழைந்த லொறிகள்



(காசா)

இஸ்ரேல் காசா இடையிலான போர் நிறுத்தத்தின் மூன்றாம் நாளில் கிட்டத்தட்ட 900 லொறிகளில் உதவி பொருட்கள் காசாவிற்குள் சென்றதாக ஐ.நா தெரிவித்துள்ளது. இது ஒப்பந்தத்தில் கோரப்பட்ட 600 லொறிகளை விட கணிசமாக அதிகம் ஆகும்.

மத்திய கிழக்கு அமைதி செயல்முறைக்கான துணை ஐ.நா. ஒருங்கிணைப்பாளராக இருக்கும் முஹன்னத் ஹாடி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காசாவில் இருந்து ஜெருசலேமுக்கு திரும்பினார். அப்போது ஐ.நா செய்தியாளர்களிடம் பேசிய ஹாடி, "பாலஸ்தீனியர்கள் தெருக்களில் நம்பிக்கையுடன் பயணிப்பது, சிலர் வீடு திரும்புவது, சிலர் வீதி களை சுத்தம் செய்ய தொடங்குவதை பார்க்கும் போது கடந்த 35 ஆண்டு கால வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாட்களில் ஒன்று." எனத் தெரிவித்தார். (நி-8)

## கிளர்ச்சிக் குழுக்களால் 80 பேர் உயிரிழப்பு

### அவசர நிலையை அறிவித்தது கொலம்பியா

(பொகோட்டா)

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் கக்கடா மாகாணத்தில் பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் செயற்படுகின்றன. அவர்கள் அண்டை நாடான கொலம்பியாவின் எல்லைக்குள் நுழைந்து அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

குறிப்பாக அப்பாவி மக்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை குறிவைத்து அவர்கள் தாக்குதல் நடத்துவதால் அரசாங்கத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதனைத் தடுக்க எல்லைப் பகுதியில் கொலம்பியா இராணுவ வீரர்களை நிலைநிறுத்தி உள்ளது.

அந்தவகையில் கொலம்பியா எல்லை வழியாக கிளர்ச்சியாளர்கள் நுழைந்தனர். அப்போது அவர்களை தடுக்க முயன்ற இராணுவ வீரர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பயங்கர மோதல் நடைபெற்றது. இந்த மோதலில் இருதரப்பிலும் இதுவரை 80 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர்.



எனவே அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால் நிலைமையை சமாளிக்க கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோ வெனிசுலா எல்லையோர மாகாணங்களில் இராணுவ அவசர நிலையை அறிவித்து உத்தரவிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# பேச்சுவார்த்தைக்கு மறுத்தால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும்!

## ரஷ்யாவை கடுந்தொனியில் எச்சரித்த ட்ரம்ப்



**(வோஷிங்டன்)**

**உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மறுத்தால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**



2022 பெப்ரவரியில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பிற்காக அமெரிக்கா ஏற்கனவே ரஷ்யாவிற்கு தடை விதித்துள்ளது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பும் விவகாரத்தையும் தனது நிர்வாகம் கவனித்து வருவதாகக் கூறிய ட்ரம்ப், உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்ற தனது கருத்தையும் வலியுறுத்தினார். அதேநேரம், உக்ரைன் போரை நிறுத்த தலையிடுமாறு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கு அழைப்பு விடுத்ததாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதேவேளை பதவியேற்று ஒரு நாள் கழித்து வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய ட்ரம்ப், அமெரிக்காவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், எதிர்வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் சீனத் தயாரிப்புப் பொருட்களுக்கு 10 சதவீத வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்குள் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்க தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி, கனடா மற்றும் மெக்சிகோ மீது 25 சதவீத வரிவிதிப்பு தொடர்பான எச்சரிக்கைகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்தது.

உத்தியோகபூர்வ வர்த்தக தரவுகளின்படி, மெக்சிகோ, கனடா மற்றும் சீனா ஆகியவை அமெரிக்காவால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னணி ஆதாரங்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# துருக்கி தீ விபத்து; உயிரிழப்பு அதிகரிப்பு



(அங்காரா)

துருக்கியில் உள்ள விருந்தகம் ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட தீப்பரவலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 76 ஆக அதிகரித்துள்ளது.

துருக்கியின் பொலு மாகாணத்தில் அமைந்துள்ள கர்தல்கயா ரிசார்ட் பகுதியில் இயங்கிவரும் கிராண்ட் கர்த்தால் என்ற 12 மாடிகளைக் கொண்ட விருந்தகத்தின் 12 ஆவது மாடியில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இதன் போது குறித்த ஹோட்டலில் 238 பேர்வரை தங்கியிருந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருந்தகத்தின் 12 ஆவது மாடியில் பரவிய தீ ஏனைய பகுதிகளுக்கும் பரவியதால் அறைகளில் தங்கியிருந்தவர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர் எனவும், அப்போது மூவர் தீயில் சிக்காமல் இருக்க மாடியில் இருந்து கீழே குதித்தபோது உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீக்காயம் மற்றும் மூச்சுத் திணறல் காரணமாக இதுவரை 76 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சிலர் அட்டைகள் மற்றும் போர்வைகளை பயன்படுத்தி கீழே குதித்து உயிர் தப்பியுள்ளனர் எனவும், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், 12 மணித்தியாலங்களுக்குப் பின்னர் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குறித்த விருந்தகத்தின் உரிமையாளர் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் துருக்கி பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்தோனேஷியாவில் நிலச்சரிவு 17 பேர் உயிரிழந்த பரிதாபம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் ஜாவா நகரில் ஏற்பட்ட நிலச்சரிவில் 17 பேர் உயிரிழந்தனர். 8 பேரைக் காணவில்லை.

ஜாவா நகரின் மத்திய பகுதியில் உள்ள பெக்கலோங்கன் என்ற இடத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால், அப்பகுதியில் காட்டாற்று வெள்ளம் வந்து நிலச்சரிவை ஏற்படுத்தியது. அதில், அங்கிருந்த வீடுகள் மண்ணில் புதைந்தன.

இதில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேரை காணவில்லை.

நிலச்சரிவு காரணமாக அங்கிருந்த பாலம் ஒன்றும் நொறுங்கி விழுந்தது.

இதனால், மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. அதனைச் சரிசெய்யும் முயற்சியில் பேரிடர் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றவாளிகளை அழைத்து வர திட்டம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கிய குற்றவாளிகள் வெளிநாடுகளில் இருந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறான 65 பேருக்கு எதிராகச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு குழு சிறைச்சாலைகளுக்குள் இருந்து குற்றச் செயல்களை வழி நடத்தி வருவதாகவும் அவ்வாறான குற்றவாளிகளை ஒரு இடத்தில் தடுத்து வைத்து குற்றச் செயல்கள் மேற்கொள்ள முடியாத வகையில் கட்டுப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எமது இராணுவத்தினர் மரியாதையான முறையில் கௌரவமாகத் தங்களது பணியை மேற்கொள்கின்றனர்.



எனினும் இலட்சக்கணக்கான இராணுவப் படையினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் சிலர் சேவையில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில குற்றவாளிகள் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு பேணியமை தெரியவந்துள்ளது.

எனவே பொலிஸ் திணைக்களத்திற்காக புதிய கட்டமைப்பொன்று உருவாக்கப்பட உள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)




| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300-350 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 750-850 | 1000 |
| தக்காளி | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150-200 | 240 |
| கோவா | 250 | 180 | 300 |
| கரட் | 300 | 300 | 400 |
| பூசணி | 150 | 80-100 | 200 |
| புடோல் | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 100-130 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-380 | 600 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 280 |
| பாகற்காய் | 400 | 550 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 200 |
| பயற்றங்காய் | 600 | 350 | 600 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 450 |
| கறிமிளகாய் | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 2000 |
| போஞ்சி | 400 | 250-300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 200 |
| கீரை - 1 பிடி | 150 | 50 | 200 |
| தேசிக்காய் | 200 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150-200 | 150-200 | 180-240 |
| இராசவள்ளி | 450 | 500-600 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 |
| முள்ளங்கி | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 150 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 306

தென்கச்சி.கோ.சுவாமிநாதன்



## பதவிக் கர்வம்

ஒரு மனிதனுக்கு மூன்று விதத்திலே கர்வம் உண்டாகுவதற்கு வாய்ப்பு உண்டு. பணம்- பதவி-புகழ்.

பணம் அதிகமாக வந்தால் கர்வம் வரலாம். பதவி பெரிதாக வந்துவிட்டதென்றால் கர்வம் வரலாம். புகழ் அதிகமாகப் போனாலும் கர்வம் வரலாம்.

இந்த மூன்று வகையான கர்வத்துக்கும் இடம் கொடுக்காமல் சிலர் இருக்கிறார்கள் பாருங்கள் அவர்கள் தான் சிறந்த மனிதர்கள். ஒரு பெரிய பொறுப்பிலே இருப்பவர்களுக்கு கர்வம் வந்துவிடக் கூடாது. அப்படி வந்துவிட்டதென்றால் அது எல்லோருக்கும் இடைஞ்சல் செய்யும்.

ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் தன்னுடைய தலைநகரத்தை சுற்றி வந்து கொண்டிருந்தார். ஒரு இடத்திலே ஒரு அழகான நிலத்தைப் பார்த்தார். ஆகா! இந்த இடத்திலே நமக்கென்று ஒரு மாளிகையைக் கட்டினால் எவ்வளவு நல்லா இருக்கும்? என்று நினைத்தார்! ராஜா நினைத்தால் அது முடியாத காரியமா?

சரி.. இந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்று விசாரிக்கச் சொன்னார். விசாரித்தார்கள். அந்த இடம் ஒரு வயதான கிழவிக்குச் சொந்தமாம்.

அந்த அம்மா தான் அதிலே ஒரு குடிசை போட்டு குடியிருந்து கொண்டிருக்கிறார்.சரி.. அந்த நிலத்துக்கு ஒரு விலையை நிர்ணயம் செய்து அதை அந்தக் கிழவியிடம் கொடுத்துவிடுங்கள் என்று உத்தரவு போட்டார் ராஜா! ஆனால் அந்த அம்மா இது எமது பூர்வீக இடம். இதை விற்கமாட்டேன். என்று சொல்லிவிட்டார்.சரி.. இரண்டு பங்கு விலை கொடுக்கிறோம் என்றார்கள் அரண்மனை ஆட்கள். அதற்கும் சம்மதிக்கவில்லை.

இதைக் கேள்விப்பட்டதும் ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.ஆட்களைக் கூப்பிட்டார்.போய் அந்தக் குடிசையைப் பிரித்து எறியுங்கள் என்று கத்தினார். பிரித்து எறிஞ்சார்கள். அந்த வயசான அம்மாவையும் அந்த இடத்தை விட்டுத் துரத்தினார்கள்.அந்த இடத்திலே ஒரு அரசமாளிகையைக் கட்டினார்கள்.

அந்த வயதான அம்மா பாவம். ராஜாவே இப்படி செய்தால் யாரிடம் போய் முறையிடுவது! ஒரு ஞானி இருந்தார். அவரிடம் போய் முறையிட முடியும். அவர் இவர்கள் சொன்னதை மனதிலே கேட்டு வைத்துக் கொண்டார். ஒரு நாள் அந்த ராஜாவே இந்த ஞானியைக் கூப்பிட்டார். புதிதாக ஒரு மாளிகை கட்டியிருக்கிறேன் வந்து பாருங்கள் என்று.

சரி என்று சொல்லி இந்தப் பெரியவர் ஒரு நாள் அந்த மாளிகைக்குப் போனார். சும்மா போகவில்லை. ஒரு கழுதையையும் கொண்டு போனார். கொஞ்சம் சாக்குகளையும் எடுத்துக் கொண்டு போனார். ராஜா பார்த்தார். அவருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. என்ன இது? மாளிகைக்கு வந்துவிட்டுப் போங்கள் என்று கூப்பிட்டால் கழுதையையும் சாக்கையும் கொண்டு வருகிறாரே என்று நினைத்தார்.

எதற்காக இதெல்லாம் என்றார். அரச தோட்டத்திலே இருந்து கொஞ்சம் மண் எடுத்துக் கொண்டு போவதற்கு ஆசைப்படுகிறேன். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்றார் இவர்.

இது என்ன வேடிக்கையான கோரிக்கையாக இருக்கிறது? என்று நினைத்தார் ராஜா. இருந்தாலும் மண்தானே கேட்கிறார் எடுத்துக் கொண்டு போகட்டுமே என்று நினைத்தார். சரி என்று அனுமதி கொடுத்தார். அந்தப் பெரியவர் தோட்டத்திற்குப் போனார். மண்ணை வெட்டினார். சாக்கிலே போட்டு நிரப்பினார். ராஜாவைக் கொஞ்சம் கிட்ட வாருங்கள் என்று கூப்பிட்டார். இந்த மண் மூட்டையைத் தூக்கி கழுதையின் முதுகிலே வைக்க வேண்டும். கொஞ்சம் உதவி செய்யுங்கள் என்றார். அதனை ஆமோதித்து ராஜா அருகில் போனார். மூட்டையைத் தூக்கிப் பார்த்தார். முடியவில்லை. திணறிப் போய்விட்டார். இப்போது அந்த ஞானி பேசினார்.

அரசே! இந்த ஒரு சாக்கு மண்ணையே உங்களால் தூக்க முடியவில்லை. அந்தக் கிழவியிடம் இருந்து அக்கிரமமாக அபகரித்த இந்தத் தோட்டம் முழுவதும் சுமக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். அது உங்களாலே முடியுமா? என்று கேட்டார்.

ராஜா யோசித்தார். தன்னுடைய செயலுக்காக வருத்தப்பட்டார். அந்தக் கிழவியை உடனடியாக வரவழைத்தார். தாயே தவறு செய்த விட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் இன்றிலிருந்து இந்த மாளிகையும் தோட்டமும் உங்களுக்குச் சொந்தம் என்றார்.

போகிறபோது இந்த உலகத்திலே இருந்து என்னத்தை எடுத்துக் கொண்டு போகப் போகிறோம். அதனாலே மிகவும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. கர்வப்படவேண்டியதில்லை. ஒரு பெரிய மனிதன் இறக்கும் தறுவாயில் இருந்தார். மிகவும் அழுதார். ஏன் அழுகிறீர்கள். என்று கேட்டார்கள் சுற்றி இருந்தவர்கள்.

நான் இறப்பதற்கு கவலைப்படவில்லை.நான் போன பின்பு நான் எமது மக்களுக்காக இதுவரைக்கும் செய்து கொண்டு வந்த சேவையை இனிமேல் யார் செய்யப்போகிறார்கள்? யாராலே அது முடியும்? அதை நினைத்துத் தான் அழுகிறேன் என்றார்.

ஒருவர் முன்னால் வந்தார். அதற்காக நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் சேவையைத் தொடர்ந்து செய்ய என்னை மாதிரி இளைஞர் பட்டாளம் தயாராக இருக்கிறது. இருந்தாலும் எங்கள் கவலை என்னவென்றால்.... என்று இழுத்தார். என்ன? என்று கேட்டார் அவர்.

நீங்கள் இதுவரைக்கும் என்ன சேவை செய்து கொண்டு வந்தீர்கள். அது தான் எங்களுக்கு இன்னும் புரியாத புதிராக இருக்கிறது என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வரத்து அதிகரிப்பு

# இரணைமடுக்குளத்தின் 14 வான் கதவுகளும் திறப்பு

## குளங்களை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானம்





(கிளிநொச்சி)

நிலவுகின்ற மழையுடனான காலநிலை காரணமாக நீர்வரத்து அதிகரித்தமையால் இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் நேற்று திறந்து விடப்பட்டுள்ளன.

நீர்வரத்து அதிகரித்தமையையடுத்து மேலதிக நீரினை வெளியேற்றுவதற்காக 14 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளமையால் குளங்களை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானமா இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஐயன் கோவிலடி, முரசுமோட்டை, கண்டாவளை, ஊரியான், பன்னங்கண்டி மற்றும் கனகராயன் ஆற்றின் அருகிலுள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

(6-8-100-316)

# சீரற்ற காலநிலையால் வவுனியாவில் 65 பேர் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற் பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வவுனியாவில் தொடர்ச்சியாகக் கன மழை பெய்து வருகிறது.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெளுக்குளம் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பீடியாபாம் பகுதியில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பாவற்குளம், இராசேந்திரங்குளம், ஈரப்பெரியகுளம், ஆறுமுகத்தான் குளம், மருத மடுக்குளம் மற்றும் கல்மடு அணைக்கட்டு என்பன நீர்வரத்து அதிகரித்தமையால் தொடர்ந்தும் வான் பாய்ந்துவருகின்றன.

இதனால் அதன் கீழ் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (6-8-250)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட நபர் கைது

(கொழும்பு)

தம்புள்ளை, பொஹொரன் வெவ பிரதேசத்தில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் இளைஞன் ஒருவன் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாத்தளை, தம்புள்ளை பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் சில பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# 8 இந்திய மீனவர்களுக்கும் அபராதம் விதித்தது நீதிமன்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணை தீவிற்கு அண்மித்த கடற்பகுதியில் சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு இந்திய மீனவர்களுக்கும் ஆறு மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட எட்டு மாத கால சிறைத் தண்டனையும் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

கடந்த 12 ஆம் திகதி அதிகாலை இரணைதீவிற்கு அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறிய மீன் பிடியில் ஈடுபட்ட எட்டு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்

இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்றக் கட்டளைக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு இந்திய மீனவர்களும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தமை, அத்துமீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களுக்கான அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு எட்டுப் பேருக்கும் தலா ஐம்பாதாயிரம் தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டு எட்டு மாத கால சிறைத்தண்டனையும் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (நி-6-8-315)

# கனகாம்பிகை குளத்தின் கீழ்

# 240 ஏக்கரில் உப உணவுப் பயிர்கள்

## கூட்டத்தில் தீர்மானம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தின் கீழான உப உணவு பயிர்செய்கை தொடர்பான பயிர்ச்செய்கைக் குழு கூட்டம் நேற்று முன்தினம் கனகாம்பிகைக்குள பொது நோக்கு மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இப் பிரதேசத்தைச் சேர்ந்த 240 விவசாயிகள் தலா ஒரு ஏக்கர் வீதம் 240 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு நாட்டின் தேசிய உற்பத்திக்கு, வளர்ச்சிக்கு அனைவரதும் பங்களிப்பு அவசியம் என பிரதேச செயலாளர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் விதையாட்சிபடுத்தல் திணைக்களம் உள்ளிட்ட துறைசார் திணைக்கள தலைவர்கள் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-315)

# விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சாரதி கைது

## வாகனமும் பறிமுதல்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் விபத்தினை ஏற்படுத்தி விட்டுத் தப்பிச் சென்ற வாகனத்தையும் அதன் சாரதியையும் புதுக் குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி புதுக் குடியிருப்பு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்திற்கு அருகாமையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் ஒரு வரை கப் ரக வாகனம் விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாகப் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து போக்குவரத்துப் பொலிஸாரும் புதுக் குடியிருப்பு பொலிஸாரும் இணைந்து நடத்திய 6 நாள் தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கையின் போது விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தைக் கண்டுபிடித்து அதன் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

விபத்தினை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் தேவிபுரத்தைச் சேர்ந்த 27 வயதுடைய வாகன சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை அந் நபரையும், வாகனத்தையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

விபத்திற்குள்ளான இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

687

காவியத் தொடர் பாகம் -III





பல்லக்கைச் சூழ்ந்திருந்த காலாமுகர்களில் ஒருவன் ஒரு திரிசூலத்தை எடுத்து அவள் முகத்துக்கு நேரே காட்டி "பெண்ணே, கூச்சல் போடாதே! கூச்சல் போடாதிருந்தால் உன்னை ஒன்றும் செய்யமாட்டோம். இல்லாவிட்டால் இந்தச் சூலத்தினால் குத்திக்கொன்று விடுவோம்" என்றான்.

வானதிக்குச் சிறிது தைரியம் வந்தது கம்பீரமாகப் பேச எண்ணிக்கொண்டு, "நான் யார் தெரியுமா? கொடும்பாளூர் வேளார் மகள், என்னைத் தொட்டீர்களானால் நீங்கள் நிர்மூல மாவீர்கள்" என்றாள். அவளுடைய மனத்தில் தைரியம் இருந்ததே தவிர பேசும் போது குரல் நடுங்கிற்று.

அதைக் கேட்ட காலாமுகன் "எல்லாம் எங்களுக்குத் தெரியும். தெரிந்துதான் உனக்காகக் காத்திருந்தோம் சற்று நேரம் சத்தமிடாமலிரு! இல்லாவிட்டால்." என்று மறுபடியும் திரிசூலத்தை எடுத்து நீட்டினான்.

அதே சமயத்தில் சாட்டையினால் 'சுளீர்' 'சுளீர்' என்று அடிக்கும் சத்தமும், 'ஐயோ' என்ற குரலும் கேட்டது. அப்படி அடிபட்டு அலறியவர்கள் சிவிகை தூக்குவோர் என்பதை வானதி அறிந்தாள். அவர்களைச் சில காலாமுகர்கள் சாட்டையினால் அடித்திருக்க வேண்டும்! அதைப் பார்த்த வானதி ஆத்திரப்பட்டுப் பல்லக்கிலிருந்து கீழே இறங்கிவிட எண்ணினாள். அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஏனெனில் சிவிகை தூக்கிகள் பல்லக்கைச் சுமந்து கொண்டு ஓடத் தொடங்கினார்கள். காலாமுகர்களும் பல்லக்கைச் சூழ்ந்த வண்ணம் ஓடிவந்தார்கள். ஓடும்போது அவர்கள் பயங்கரமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடினார்கள். ஆகையால் வானதி தான் கூச்சல் போடுவதில் பயனில்லை என்பதை உணர்ந்தாள். ஓடும் பல்லக்கிலிருந்து கீழே குதிப்பதும் இயலாத காரியம். அப்படிக் குதித்தாலும் இந்தப் பயங்கர மனிதர்களுக்கு மத்தியில் தானே குதிக்க வேண்டும்? இவர்கள் எங்கேதான் தன்னைக்கொண்டு போகிறார்கள், எதற்காகக் கொண்டு போகிறார்கள் பார்க்கலாம் என்ற எண்ணமும் இடை இடையே தோன்றியது.

சுமார் அரை நாழிகை நேரம் ஓடியபிறகு மரங்களின் மறைவிலிருந்து ஒரு பழைய துர்க்கைக் கோயிலுக்கு அருகில் வந்து நின்றார்கள். இதற்குள் நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. ஒருவன் கோயிலுக்குள் சென்று அங்கே எரிந்து கொண்டிருந்த தீபத்தை எடுத்துக் கொண்டு வந்து வானதியின் முகத்துக்கு எதிரே காட்டினான், காலாமுகர்களில் ஒருவன் வானதியை உற்றுப்பார்த்து "பெண்ணே! நாங்கள் கேட்கும் விவரத்தைச் சொல்லிவிடு! உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம். அல்லது நீ எங்கே போக விரும்புகிறாயோ, அங்கே கொண்டு போய்ப் பத்திரமாய்ச் சேர்த்து விடுகிறோம்" என்றான். வானதியின் மனதில் இதுவரை தோன்றாத சந்தேகம் உதித்தது. "எனக்கு என்ன விபரம் தெரியும்? என்னை என்ன கேட்கப் போகிறீர்கள்?" என்றாள்.

"பெண்ணே! நீ யாரோ ஒருவரை அந்தரங்கமாகச் சந்திப்பதற்கே இப்படித் தனியாகப் பிரயாணம் தொடங்கினாய் அல்லவா? அவர் யார்? யாரைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டாய்?"

வானதியின் சந்தேகம் உறுதிப்பட்டது. ஒரு கண நேரத்தில் அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. ஒரு சிறிய சத்தத்தைக் கேட்டாலும் பயந்து மிரண்டு கொண்டிருந்த பெண்மான் உலகில் எதற்கும் அஞ்சாத பெண் சிங்கமாக மாறியது.

"நான் யாரைச் சந்திக்கப் புறப்பட்டால் உங்களுக்கு என்ன? நீங்கள் யார் அதைப் பற்றிக் கேட்பதற்கு? சொல்ல முடியாது!" என்றாள் வானதி.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நேர்மை



(நேற்றைய தொடர்ச்சி)

உடனே ஆசிரியர் வகுப்பில் இருந்த எல்லோரையும் கூப்பிட்டு பிரார்த்தனை நடைபெற்ற நேரத்தில் யார் வகுப்பில் இருந்தது என்று கேட்டார். எல்லோரும் தீபாவைக் காட்டினார்கள். தீபா அப்பாவி அவளுக்கு அந்தப் பேனாவைப் பற்றி எதுவும் தெரியாது.ஆசிரியர் தீபாவை மிகவும் திட்டினார். பேனாவைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தீபா சொன்னதை அந்த ஆசிரியர் கண்டுகொள்ளவே இல்லை. கடைசியாக அந்த ஆசிரியர் நான் உனக்கு ஒரு நாள் டைம் தாரேன் அதற்குள் உண்மையைச் சொல்ல வேண்டும் இல்லை என்றால் உன்னை தலைமை ஆசிரியரிடம் கூட்டிக் கொண்டு போக வேண்டியிருக்கும்" என்றார்.

ஆசிரியர் சொன்னதைக் கேட்ட உமா மிகவும் பயந்து போய் ஒன்றுமே பேசாமல் இருந்தாள். அன்றைய வகுப்பு முடிந்ததும் மாலையில் உமா வீடு திரும்பினாள். அன்று முழுவதும் அவள் செய்த தவறை நினைத்துக் கொண்டு இருந்தாள். அவளால் தான் தீபா ஆசிரியரிடம் திட்டு வாங்கினாள். அந்தக் குற்ற உணர்ச்சியால் அவளால் அன்றைக்கு தூங்க முடியவில்லை.

அடுத்த நாள் காலையில் உமா பள்ளிக்கு போனாள். அவள் வகுப்பிற்கு உள்ளே போகும் போது தீபா அழுவதைப் பார்த்து உமா உண்மையைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். ஆசிரியர் வந்து தீபாவை உண்மையைச் சொல்ல சொன்னார். ஆனால் உமா அவள் கையை பிடித்து "நிறுத்து அந்த பேனா என்னிடம் தான் இருக்கிறது. நேற்று உண்மையைச் சொல்ல நான் பயந்தேன்.என்னை மன்னித்துவிடுங்கள். நான் இனி மேல் இந்த மாதிரி எதுவும் செய்ய மாட்டேன்" என்று சொன்னாள் உமா.

வகுப்பில் இருந்த எல்லா மாணவர்களும் மிகவும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் உமாவைப் பார்த்தார்கள்.

உமா சொன்னதைக் கேட்டு "உமா நீ ரொம்ப நேர்மையான பிள்ளை, எல்லோர் முன்னாலும் வந்து தப்பை ஒத்துக் கொள்வது அவ்வளவு சிறிய விடயம் இல்லை. நாம் எல்லோரும் தவறு செய்யலாம் ஆனால் நமது தவறை உணர்ந்து அதை சரி செய்வது மிகவும் பெரிய விடயம். தீபாவிடம் மன்னிப்பு கேள்.இனிமேல் இது மாதிரி எதுவும் செய்ய மாட்டேன் என்று என்னிடம் சத்தியம் செய் என்று சொன்னார் ஆசிரியர்.

பின்பு உமா தீபாவிடம் மன்னிப்புக் கேட்டு ஜோதியுடைய அந்தப் பேனாவை திருப்பிக் கொடுத்து விட்டாள். எல்லோரும் உமாவின் நேர்மையைப் பாராட்டி கைதட்டினார்கள்.

நீதி: நாம் தெரியாமல் தவறு செய்தாலும் உமாவைப் போல நம் தவறைத் திருத்திக் கொண்டு நேர்மையாக இருக்க வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் ஒரு எதிர்ப்பார்ப்பு! ஆனால் ஒவ்வொரு நாளின் முடிவிலும் ஒரு அனுபவம்.... – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# துரோணரும் கர்ணனும் சித்தம் கலங்கியபோது...

வீரம் என்றால் என்ன என்று பொதுவில் எவரும் கேட்பதில்லை. அவ்வாறு கேட்காமல் இருப்பதற்குக் காரணம் உண்டு.

அதாவது வீரம் என்பது குறித்து, அவரவர் தம்மளவில் பொருள் கொள்கின்றனர்.

ஆம், ஐந்து ஆறுபேருடன் சண்டையிடுவது அல்லது சண்டையிடுவதையே சாதாரண வழமையாகக் கொள்வது, வீதியில் நின்று பொதுமக்களை அதட்டுவது என வீரத்தை பலவாறாகப் பலரும் புரிந்து கொள்கின்றனர்.

ஆனால் வீரம் என்பதற்கு ஔவையார் தருகின்ற விளக்கம் இங்கு கவனிக்கத்தக்கது.

புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம் என்கிறார் ஔவையார்.

ஆக, வீரம் என்றால், அது புலன் ஐந்தையும் வெல்லுகின்றதாக இருக்க வேண்டும்.

ஆம், புலனடக்கம் இல்லாதவனால் போர்க்களத்தில் நின்று களமாடுவது இயலாத காரியம்.

துரோணர் மிகப் பெரும் வீரர். அவரின் மன உறுதிக்கு முன்னால் அனைத்தும் தவிடுபொடியாகிவிடும்.

எனவே துரோணரை மனத்தால் பலவீனப்படுத்த வேண்டும். அப்போதுதான் அவரைப் பாண்டவர்களால் வெல்ல முடியும் எனத் தீர்மானிக்கின்றான் பார்த்தசாரதி.

ஆம், துரோணரை நிலைகுலைய வைக்க என்ன செய்யலாம். அசுவத்தாமா என்ற அவரது மகன் போர்க்களத்தில் இறந்துவிட்டான் எனும் பொய்ச் செய்தியைத் துரோணருக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனக் கண்ணன் முடிவு செய்கிறான்.

துரோணருக்குத் தகவல் செல்கிறது. தனக்குக் கிடைத்த தகவலை உறுதி செய்ய அவர் தருமரை நாடுகிறார். தருமர் அசுவத்தாமா இறந்தது மெய்யே என உரக்கக் கூறி; யானை என மெல்லிதாய் பகர, துரோணர் மனம் சோர்ந்து தன் கரத்திடை இருந்த வில்லை நழுவவிட, அந்நேரம் துரோணரை நோக்கி வீசப்பட்ட பாணம் அவரைக் கொல்கிறது.

இதேபோலத்தான் மாவீரனாகிய கர்ணன் போர்க்களத்தில் நிலை குலைந்து போகின்றான்.

அன்னை குந்திதேவி கர்ணனைச் சந்திக்காத வரை கர்ணன் சித்தம் கலங்கியவன் அல்ல.

என்ன செய்வது, பெற்ற தாய் தன்னைப் பார்த்துவிட்டாள். எதிரே போர் தொடுப்பவர்கள் தன் சகோதரர்கள் என்ற உண்மையை அவன் தெரிந்து கொண்டான்.

இதன் காரணமாக அவன் சித்தம் கலங்கி செய்வதறியாது போர்க்களத்தில் தனித்து நிற்கின்றான்.

அந்நேரம், கர்ணன் தங்களின் அண்ணன் என்பதை அறியாத பாண்டவர்கள் கர்ணன் மீது கணை தொடுக்க, அவன் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்றான்.

ஆம், துரோணரும் கர்ணனும் எங்ஙனம் மனம் சோர்வுற்றார்களோ அதுபோல எங்கள் தமிழ் அரசியல் தரப்பும் இப்போது சோர்வுற்றுப் போயுள்ளது.

ஆம், தமிழ் அரசியல் கட்சிக்குள் ஏற்பட்ட உள்ளக முரண்பாடு அவர்களை சோரவைத்து அவர்களின் பயணத்தை திசை திருப்பி விட்டது.

எனவே இவர்களால் அநுரவின் அரசாங்கத்துக்கு எந்த இட்டல் இடைஞ்சலும் இருக்கப் போவதில்லை.

இவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொள்வர். இனி இதுதான் நடக்கும்.

# ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்ட இலங்கையர்களின் நிலை என்ன?

## பாராளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி கேள்வி

*(கொழும்பு)*

ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக ஏமாற்றப்பட்டு இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது நிலை என்ன?

அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்றுப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் அவர்கள் மீட்கப்பட்டு தமது குடும்பங்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர இராஜதந்திர ரீதியில் இவ்விடயத்தினை அணுகி வருவதாகவும் இது தொடர்பில் முக்கிய பேச்சு வார்த்தைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் ரஷ்ய இராணுவத்திலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் ஒருவார காலத்திற்குள் பாராளுமன்றுக்கு அறியத்தருவோம் என்றார். (ம-7)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பாதுகாப்புத் தரப்பு உடந்தை

## உறுதிப்படுத்தினார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

*(கொழும்பு)*

நாட்டில் அண்மைக் காலமாக அரங்கேறும் குற்றச் செயல்கள் மற்றும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளமையை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்காத் திட்டம் தொடர்பிலான விவாதத்தின் போது இது குறித்து கருத்துரைத்த அவர்,

நாட்டில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தினால் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர், இருவர் இதில் தொடர்புபட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது என்றார். (ம-7)

# சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2025

வடபகுதி மக்களினால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் வர்த்தகத் திருவிழாவான, யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2025 இம் மாதம் 24,25 மற்றும் 26 திகதிகளில்முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொருளாதார முன்னேற்றத்திற்கான வடக்கின் நுழைவாயில் எனும் தொனிப்பொருளுடன் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது இம்முறையுடன் 15 ஆவது ஆண்டாக நடைபெறுகிறது.

**Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd** நிறுவனம் மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றமும் இணைந்து யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்தி வருகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தவும் வடக்கிலுள்ள சமூகங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிந்து கொள்வதற்கும் தெற்கு மற்றும் சர்வதேச தொழில் முயற்சியாளர்கள் வடக்கிலுள்ள சகதொழில் முயற்சியாளர்களைச் சந்தித்து வியாபார பொருளாதார தொழில் நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்க்கவும் எமது தொழில் முயற்சியாளர்கள் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளை அறிந்து பயனடையும் ஒரு களமாகவே யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைவது சுட்டிக காட்டத்தக்கது.(நி-8)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் உடன் கைது

## நீரியல் வளத்திணைக்களம் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி அண்மைக்காலமாக யாழ் மாவட்ட கடற்பரப்புக்களில் பல்வேறு மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக மீன் வளம் குறைந்து இலங்கையின் கடல் வளம் அழிவடையும் பாதகமான நிலை உருவாயுள்ளது.

எனவே சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோரை கைது செய்யுமாறு கடற்படை, இராணுவம், விமானப்படை, பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோருக்குக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தால் கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்தக் கடிதத்தின் பிரதிகள் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தனித்தனியாக யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் சுதாகரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தங்கூசி வலை, அடிமடி தொழில் (பொட்டம் ரோளர்) ஒளி பாய்ச்சி மீன் பிடித்தல் உள்ளடங்கலாக 14 தொழில்கள் தடை செய்யப்பட்ட தொழில்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# ஆளுந்தரப்பைத் தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறையில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் மூவர் பொலிஸில் சரணடைந்திருந்தனர்.

சட்டத்தரணி ஒருவரூடாக மேற்படி மூன்று சந்தேக நபர்களும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தனர்.

இந்நிலையில், மூன்று சந்தேகநபர்களையும் பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (ம-7)

## உரிமம் மாற்றத்தின் போது

# மாகாண எழுத்துக்களை மாற்றத் தேவையில்லை

வாகனத்தின் உரிமத்தை மாற்றும்போது அல்லது மாகாணங்களை மாற்றும்போது பயன்படுத்தப்படும் மாகாண எழுத்துக்களை இனி நீக்கவோ அல்லது மாற்றவோ தேவையில்லை என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை எதிர்காலத்தில், புதிய வாகனங்களைப் பதிவு செய்தாலோ, தொலைந்து போன அல்லது பயன்படுத்த முடியாத எண் தகடுகளுக்கோ அல்லது ஏதேனும் காரணத்திற்காக ஒரு தனிநபர் கோரும் போது மட்டுமே வாகன எண் தகடுகள் வழங்கப்படும் என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

05

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வலிகாமம் மேற்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 15 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 15 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 25 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 8,119 | 34.44% | 9 | 9 | - | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 5,638 | 23.91% | 6 | 3 | 3 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,511 | 14.89% | 4 | 1 | 3 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,109 | 13.19% | 3 | 2 | 1 | - |
| சுயேச்சைக் குழு | 1,408 | 5.97% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,279 | 5.42% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 224 | 0.95% | - | - | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 198 | 0.84% | - | - | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 91 | 0.39% | - | - | - | - |
| மொத்தம் | 23,577 | 100% | 25 | 15 | 10 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 23577 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 506 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 24083 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 34292 |

வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | சுழிபுரம் மேற்கு | J 172, J 173 | ITAK | 881 |
| 2 | சுழிபுரம் கிழக்கு | J174 | TC | 370 |
| 3 | பன்னாகம் - பனிப்புலம் | J 175, J176 | ITAK | 565 |
| 4 | பொன்னாலை | J 170 (தீவு உட்பட) | TC | 329 |
| 5 | தொல்புரம் | J168, J 169 | ITAK | 561 |
| 6 | வட்டுக்கோட்டை கிழக்கு - சித்தங்கேணி | J 157, J 177 | TC | 700 |
| 7 | சங்கானை மேற்கு மற்றும் சங்கானை மத்தி | J 179, J 181 | UNP | 898 |
| 8 | மூளாய் | J 171 | ITAK | 615 |
| 9 | வட்டுக்கோட்டை வடக்கு, மேற்கு | J 158, J167 | UNP | 516 |
| 10 | சங்கானை கிழக்கு, தெற்கு | J 178, J 180 | ITAK | 721 |
| 11 | சங்கரத்தை | J 159 | EPDP | 338 |
| 12 | வட்டுக்கோட்டை தெற்கு, தென்மேற்கு | J 165, J 166 | ITAK | 600 |
| 13 | அராலி மேற்கு, அராலி மத்தி | J 160, J 161 | ITAK | 761 |
| 14 | அராலி தெற்கு | J 162 | ITAK | 487 |
| 15 | அராலி கிழக்கு, வடக்கு | J 163, J 164 | ITAK | 1032 |

## 10. வலிகாமம் வடக்கு பிரதேச சபை

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் மொத்தமாக 45 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 21 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை-21 ஆகும். வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 57.03 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 60278 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வலிகாமம் வடக்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 21 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 21 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 39 (மேன்மிகை உறுப்பினர்கள் உட்பட) |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 9,414 | 37.72% | 13 | 17 | - | 4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 5,621 | 22.52% | 8 | 3 | 5 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 3,935 | 15.77% | 6 | 1 | 5 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 3,131 | 12.55% | 4 | - | 4 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,775 | 7.11% | 2 | - | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,081 | 4.33% | 2 | - | 2 | - |
| மொத்தம் | 24,957 | 100% | 35 | 21 | 18 | 4 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 24,957 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 449 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 25,406 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 60,278 |

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | இளவாலை வடமேற்கு | J222 | ITAK | 381 |
| 2 | கீரிமலை | J 221, J 226 | ITAK | 423 |
| 3 | காங்கேசன்துறை | J 233, J 234, J 235 | ITAK | 359 |
| 4 | தையிட்டி | J 247, J 249, J 250 | ITAK | 476 |
| 5 | மயிலிட்டி | J 246, J 248, J 251 | ITAK | 740 |
| 6 | பலாலி மேற்கு | J 255, J 256 | TC | 171 |
| 7 | பலாலி வடக்கு | J 254 | ITAK | 234 |
| 8 | பலாலி தென்கிழக்கு | J 252, J 253 | ITAK | 389 |
| 9 | மாவை வீமங்காமம் | J 231, J 232, J 236, J237 | ITAK | 805 |
| 10 | கொல்லன்கலட்டி | J 225 | EPDP | 380 |
| 11 | தெல்லிப்பளை தென்மேற்கு | J 223, J 224 | ITAK | 478 |
| 12 | கும்பளாவளை | J 215, J 216 | ITAK | 654 |
| 13 | தெல்லிப்பளை மேற்கு | J 229, J 230 | ITAK | 512 |
| 14 | வறுத்தலைவிளான் | J 240, J 241 | EPDP | 218 |
| 15 | வசாவிளான் | J 244, J 245 | ITAK | 397 |
| 16 | குரும்பசிட்டி - கட்டுவன் | J 238, J 239, J 242, J 243 | ITAK | 565 |
| 17 | தெல்லிப்பளை | J 227, J 228 | EPDP | 746 |
| 18 | அளவெட்டி கிழக்கு | J 217, J 218 | ITAK | 386 |
| 19 | அளவெட்டி தென்மேற்கு | J 219, J 220 | ITAK | 793 |
| 20 | மல்லாகம் | J 213, J 214 | ITAK | 542 |
| 21 | மல்லாகம்-தெற்கு | J 212 | ITAK | 342 |

## 11.வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையில் மொத்தமாக 28 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை-17 ஆகும். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 44.98 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 55 622 பேர். 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 37053 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

## 12. வலிகாமம் தெற்கு பிரதேச சபை

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் மொத்தமாக 30 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 18 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை -18 ஆகும். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 31.53 சதுர கிலோமீற்றர்கள் ஆகும்.

2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 56417 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 37 086 ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனை...

தாய்க்கு முன்னால் 20 பேர் கொண்ட குழு ஆடைகளைக் களைந்து நிர் வாணமாக்கி, சித்திரவதை புரிந்து கட்டி வைத்து மிக மோசமான முறை யில் தாக்குதல்களை மேற்கொண் டுள்ளது.

சித்திரவதை மற்றும் தாக்குதல் களை மேற்கொள்ளும்போது , தாக்கு தலாளிகள் அவற்றைக் கையடக்கத் தொலைபேசியில் வீடியோ மற்றும் புகைப்படங்களை எடுத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ள நிலையில் சம்பவத்து டன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத் திய நிலையில் சந்தேகநபரை எதிர் வரும் 03ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தர விட்டுள்ளது.

அதேவேளை கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளின் அடிப்படையில் ஏனைய சந்தேகநபர்களை அடையாளம் கண் டுள்ளதாகவும், இளைஞனை சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவற்றின் அடிப் படையிலும் சந்தேக நபர்களை அடை யாளம் கண்டு கொண்டுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந் தேகத்தில் சுமார் 20 பேரை அடை யாளம் கண்டுள்ளதாகவும், அவர்கள் தற்போது தலைமறைவாகி யுள்ள நிலையில் அவர்களைக் கைது செய் வதற்கு நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,33)

## கொழும்பில்...

32 வயதான குறித்த பெண் மரு தானைப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டிருந்த நிலையில், நேற்று அதி காலை தற்கொலை செய்து கொண் டுள்ளார்.

உயிரிழந்த பெண், வவுனிக்குளம் அம்பாள்புரம் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்திற்காகப் பிறப்பிக்கப்பட்டி ருந்த பிடியாணைக்கு அமைய நேற்று முன்தினம் இரவு மருதானைப் பொலி ஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என்றும், சிறைச் சாலையின் இரும்புக் கதவில் தனது பாவாடையைக் கட்டிக்கொண்டு தூக் கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ள தாகவும் மருதானைப் பொலிஸார் நீதி மன்றத்தில் அறிக்கையிட்டுள்ளனர். (ம-7)

## வெளிநாட்டுக்...

இலங்கையில் வெளிநாட்டு போர்க் கப்பல்கள், இராணுவ விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குவதற் காக தற்போதுள்ள நிலையான செயற் பாட்டு நடைமுறையைத் திருத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

விரைவில் எதிர்காலத்தில் இந்த விட யத்தில் புதிய முறையை உருவாக்கு வதே குழுவின் பணி என அமைச்சர் விஜித ஹேரத் கூறினார். (ம-7)

## சொகுசு...

துள்ளது.

அவ்வாறான 30 இல்லங்கள் தொடர்பில் தற்போது மதிப்பீட்டு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாகப் பொது நிர்வாக அமைச்சர் பேரா சிரியர் சந்தன அபேரத்ன தெரிவித் தார்.

இதற்கு மேலதிகமாக உத்தியோக பூர்வ இல்லங்களாக அமைச்சுக் களின் கீழுள்ள 20 இல்லங்கள் தொடர் பாக மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள 15 பங்களாக்கள் தொடர் பிலும் மதிப்பீடு முன்னெடுக்கப்பட் டுள்ளதாக அவர் கூறினார். (ம-7)

## அரசியல்...

"அரசியல் கைதிகள் என்று சொல் லப்படுபவர்கள் தொடர்பில் நீதி அமைச்சர் தெரிவித்த கருத்து சில மீண்டும் அரசியலாக்கியுள்ளனர்.

உண்மையில்நீதிமன்ற வழக்குகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு தமிழர் களைத்தான் அரசியல் கைதிகள் என்று ஒரு தரப்பினரும், புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் என்று இன்னொரு தரப்பினரும் கூறிவரு கின்றனர்.

அப்படியானவர்களில் 10 பேர் வரை தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீதான வழக்குகளை ஆராய்ந்து அவர்களை விடுவிக்க நட வடிக்கை எடுப்போம். எனவே அரசி யல் கைதிகள் என்று சொல்லப்படு பவர்களை வைத்து அரசியல் நடத்த இடமளிக்கமாட்டோம்" என்றார். (ம-7)

## ஒரு வாரத்துக்...

களில் இடம்பெற்று வருகின்றன. எதிர் வரும் வாரத்தில் இதுதொடர்பிலான சில முன்னேற்ற கரமான தகவல் கள் வெளியிடப் படும்.

இதேவேளை, திறைசேரி பிணை முறி மோசடி தொடர்பாக, சிங் கப்பூர் குடிமக னான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர் ஜுன மகேந் திரனை நாடு கடத்துவதில் பல் வேறு சவால்கள் உள்ளன.

ஆனால் இந்த வழக்கில் சிங்கப் பூரின் ஒத்துழைப் பைப் பெறுவதற் கான முயற்சிகள் இடம் பெற்று வரு கின்றன என்றும் குறிப்பிட்டார். (ம-7)

## உள்ளூ...

லமைப்பு உரு வாக்கம் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர் களின் சம்பளப் பிரச்சினை தொடர் பில் ஊடகவிய லாளர்கள் எழுப் பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**கேள்வி** - தேசிய மக்கள் சக்தியின் கொள் கைப் பிரகடனத் துக்கு ஏற்ப நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி முறைமை நீக் கப்படும் எனக் கூறப்பட்டதல் லவா?

**பதில்**- ஆம். தற்போது நாம் உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்துவது தொடர்பில் அவ தானம் செலுத்தியுள்ளோம். இந்தத் தேர்தலைத் தொடர்ந்து அரசியல மைப்புக்கான திருத்தங்களை மேற் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லா மல் செய்வதற்கான தீர்மானத்தின் போது கொள்கை ரீதியான பிரச்சினை கள் ஏற்படாது என நாம் நம்புகிறோம்.

எனவே நிறைவேற்று அதிகார முறைமை நிறைவுக்குக்கொண்டு வருவதாக இருந்தால் கட்டாயமாக தேர்தல் முறைமை மாற்றப்பட வேண் டும்.

தேர்தல் முறைமை மாற்றத்துக்கு அமையவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முடிவு கொண்டு வர முடியும். இங்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் போது பிரச்சினைகள் ஏற்படாது. தேர் தல் முறைமையிலேயே சிக்கல் உள் ளது என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 5724
P 9 2 2 6 9 0
அத சம்பத P 2 6 9 0
சீட்டிழுப்பு இலக்கம் 299

தன நிதானய
திகதி - 2025.01.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1754
Y 02 30 34 62 Y
Double Chance 54899

மெகா பவர்
திகதி 22/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2072
R 14 09 40 43 68

லக்கி 7 VIP
திகதி 2025.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 550
B 3 2 3 1 0 5 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3966
சீட்டிழுப்பு திகதி 22.01.2025
U 02 16 62 76
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 1033
விருச்சிகம் 06 20 27 42 விருச்சிகம்
61717 41

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.01.2025 வெற்றி வாரம் 432
0 5 0 9 3 9 0
94695
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29.629.814.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2698
சீட்டிழுப்பு திகதி 2025.01.22 தினம் புதன்கிழமை
10 14 23 74 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,475,733.60

சனிதா
22.01.2025 வெற்றி வாரம் 4859
14 26 42 46 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,700,398.80
84789

ஜயோதா Jayoda
2025.01.22 வெற்றி வாரம் 2097
04 06 17 64 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,463,988.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4410
சீட்டிழுப்பு திகதி 22.01.2025 தினம் புதன்கிழமை
06 27 41 58 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6.196.643.20
161253

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 07 28 30 50 66
1874
22.01.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,736,248.00

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2524
சீட்டிழுப்பு திகதி : 2025.01.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64.983.226.40
ADA KOTIPATHI
21 55 64 70 I
493242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2113)


076 825 7716 (ஆகாஸ்)

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (773)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

48/=



~~90/=~~

076 800 6500

## தென்னந்தோட்ட பராமரிப்பாளர் தேவை

பளையிலுள்ள தென்னந்தோட்டம் ஒன்றை தங்கியிருந்து பராமரிப்பதற்கு ஆள் தேவை. குடும்பப் பொறுப்புக் குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : 075 719 0110

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி (A9) வீதியிலிருந்து (300 மீற்றர்) அரியாலை வீதியில் 1.4 பரப்பில் அமைந்துள்ள 3 படுக்கை அறை, 3 குழியலறை, சமையலறை மற்றும் விசாலமான வரவேற்பறைகளையும் மேலும் சகல வசதிகளையும் கொண்ட நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் உள்ள மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (வாகனம் நிறுத்தும் வசதி உண்டு. மாபிள் பதித்த வீடு)
விலை - ரூபா ஒரு கோடி. (768)

077 472 4075

## Group Classes / Personal Class

Civic Education : 6 - 9

(English Medium)

Mr. G.Jathes (BA.PGDE)

Near to Kokkuvil. (3088)

077 935 2380

V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2112)

## வேலையாள் தேவை

மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

○ 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது.

யாழ். மாவட்டத்திற்கு உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும். (3092)

தொடர்பு:
075 590 4041

## பராமரிப்பாளர் தேவை

சுயமாக தனது வேலைகள் அனைத்தையும் செய்யக்கூடிய பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.

அடிப்படைச் சம்பளம் :- 50,000/- (C-2111)

தொடர்பு:
077 308 6894

## வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் அலுவலகங்களுக்கு ஏற்ற வகையில் 1ம், 2ம் மாடி (4000 சதுர அடி) வாடகைக்கு உண்டு. (C-2110)

தொடர்புகளுக்கு:
076 3156 470

## மாப்பிள்ளை தேவை

1. நெடுந்தீவு, இந்து, 1996, அச்சுவினி, MBBS, Doctor, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
2. கொக்குவில் - மானிப்பாய், இந்து, 1994, மகம், MBBS Doctor, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
3. நெல்லியடி, இந்து, 2001, திருவோணம், BSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
4. புத்தூர், இந்து, 1994, ரோகிணி, Graduate, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
5. நல்லூர், Roman catholic, 1977, canada citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
6. கைதடி - மன்னார், Roman Catholic, 1983, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
7. கரவெட்டி - கொக்குவில், இந்து, 1993, ரோகிணி, Doctor (MD)(MPH), USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
8. காரைநகர், இந்து, 1991, கார்த்திகை, MSc, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
9. மாதகல், இந்து, 1992, ரோகிணி, Phd, USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
10. அனலைதீவு, இந்து, 1996, பரணி, BSc, Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், உள்நாடு, வெளிநாட்டு, Unmarried, Divorce பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (767)

S.Sharma J.P
www.thaalee.com
- 077 539 3728
- 077 803 8193

## ஆவ...

மனோகரன் பிரணவன் (வயது 23) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், யாழில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன், வீதியில் மாடுகளை கூட்டி (சாய்த்து) சென்ற இளைஞனுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும், மாடுகளை சாய்த்து சென்ற இளைஞனும் படுகாயமடைந்த நிலையில், வீதியில் சென்றவர்கள் இருவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ம-7,33)

# மரண அறிவித்தல்



மலர்வு
10.07.1938

உதிர்வு
21.01.2025

## திருமதி சுப்பிரமணியம் இராசமலர்

கிளிநொச்சி பெரியபளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசமலர் அவர்கள் நேற்று 21.01.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு துணைவியும் விநாயகமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரியும் கந்தையா, செல்லத்துரை, சேனாதிராசா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, விக்கினேஸ்வரன், யோகேஸ்வரி, தியாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, பத்மகுமாரி, சுதாகினி, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீகுகஞானசோதி, தர்மலிங்கம், அன்ரன், அன்பழகன், ராகினி, ஜெயக்குமார், கனகரத்தினம், யோகநாதன், நாகேந்திரன், மகாதேவன், துஸ்யந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலமுருகன், கிருத்திகா, தினேசன், விதுசன், சதீஸ்குமார், துவாரகா, சுதாநந் கிருசா, சதீஸ்குமார் நிருசா, ஸ்ரிபன் சஞ்சிகன் கிருத்திகா, அமலதர்சிகன், ரதிகாந் லக்ஷிகா, ஜனுசிகா, ஆர்த்திகன், வர்சா, மானுசா, அம்சன், அமிர்சா, அபிசனன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் அகரன், லதாங்கி, ஆதிரன், ஜாஸ்வி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 24.01.2025 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மலையாங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யோகநாதன் - மருமகன்
+94770891694

தகவல் :
குடும்பத்தினர்

(766)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.